# துறையூர் நகராட்சி

2020 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 11.09.2020 வெள்ளி கிழமை (தமிழ் சார்வரி வருடம் ஆவணி மாதம் நாள்.26) நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நகர்மன்ற பொருள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய சிறப்புக்கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை:திரு.அ.வீரமுத்துக்குமார்
தனி அலுவலர்.

| மன்ற கூட்டம் நடை பெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள் | | | | | | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|---|---|---|---|---|
| 11.09.2020 | **01** | துறையூர் நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (IUDM 2020-21) நிதியின் கீழ் புதிதாக தார்சாலைகள் அமைக்கும் பணிக்கு கீழ்கண்ட பணிகள் தேர்வு செய்து இந்நகர்மன்ற தீர்மான எண்.455 நாள்.10.07.2020ல் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து மதிப்பீடு ரூ.382.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதிக்காக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது. | | | | | தீர்மான எண்:503 அனுமதிக்கப்பட்டது, |
| | | வ. எண் | வார்டு எண் | சாலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | மொத்தத் தொகை (ரூ.இலட்சத்தில்) | |
| | | | | **சிப்பம் - I** | | | |
| | | 1 | 1 | கோவிந்தாபுரம் காலனி சாமிநகர் மற்றும் அம்பாள் நகர் | 30.70 | 122.00 | |
| | | 2 | 9 | கீரம்பூர் காலனி மற்றும் அமுதசுரபி நகர் | 21.50 | | |
| | | 3 | 24 | குடில் ரோடு குறுக்குத்தெரு மற்றும் எக்ஸ்டென்சன் KV Bank பின்புறம் | 37.60 | | |
| | | 4 | 24 | அஷ்டலெட்சுமி நகர் மற்றும் செல்வம் நகர் குறுக்குத்தெரு | 32.20 | | |
| | | | | **சிப்பம் - II** | | | |
| | | 5 | 9 | பெரியார் நகர் | 26.80 | 130.00 | |
| | | 6 | 18 | சொரத்தூர் ரோடு குறுக்குத்தெரு | 72.40 | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | 19 | மலையப்பன் சாலை குறுக்குத்தெரு | 30.80 | |
| | | **சிப்பம் - III** | | |
| 8 | 9 | சாமிநாதன் நகர் | 69.70 | 130.00 |
| 9 | 19 | அம்மாப்பட்டி சாலை | 28.10 | |
| 10 | 24 | சுந்தராபுரம் | 32.20 | |
| | | **மொத்தம்** | | **382.00** |

அதனடிப்படையில் மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA2) அரசாணை எண்.(D) 303, நாள்.09.09.2020ன் படி கீழ்கண்ட விபரப்படியான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது..

| வ.எண் | விபரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | IUDM நிதி (ரூ.இலட்சத்தில்) | நகராட்சி பங்குத்தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | சிப்பம் - 1 | 122.00 | 97.60 | 24.40 |
| 2 | சிப்பம் - 2 | 130.00 | 104.00 | 26.00 |
| 3 | சிப்பம் - 3 | 130.00 | 104.00 | 26.00 |
| **கூடுதல்** | | **382.00** | **305.60** | **76.40** |

(ந.க.எண்.1833/2020/இ1)

**அலுவலக குறிப்பு** :மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ஒம்/-.அ.வீரமுத்துக்குமார்
தனி அலுவலர்

/ /உண்மை நகல் //

ஆணையர்,
துறையூர் நகராட்சி

## துறையூர் நகராட்சி

2020 ஆம் வருடம் செப்டம்பர் 30 மாதம் புதன் கிழமை (தமிழ் சார்வரி வருடம் புராட்டாசி மாதம் நாள்.14) நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நகர்மன்ற பொருள் மீது மேற்கொள்ளப்பட வேண்டியசாதாரணக்கூட்டநடவடிக்கைகள்

.

முன்னிலை:திரு.அ.வீரமுத்துக்குமார்
தனி அலுவலர்.

| மன்ற கூட்டம் நடை பெற்ற நாள் | | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|---|
| 30.09.2020 | 01 | ஆணையர் அவர்களது செப்டம்பர் மாதம் 2020 நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** : பதிவு செய்யலாம். | தீர்மான எண்:504 பதிவு செய்யப்பட்டது |
| 30.09.2020 | 02 | நகராட்சி பொறியாளர் அவர்களது செப்டம்பர் மாதம் 2020 நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** : பதிவு செய்யலாம். | தீர்மான எண்:505 பதிவு செய்யப்பட்டது. |
| 30.09.2020 | 03 | துப்புரவு அலுவலர் அவர்களது செப்டம்பர் மாதம் 2020 நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** : பதிவு செய்யலாம். | தீர்மான எண்:506 பதிவு செய்யப்பட்டது. |
| 30.09.2020 | 04 | தனி அலுவலர் மற்றும் ஆணையர் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அவர்களது ந.க.எண்.4670/2020/சி1 (மையம்) நாள்.01.09.2020-ம் தேதிய கடிதத்தில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் ஸ்ரீரங்கம் கோட்ட அலுவலகத்தில் தூய்மைப் பணியாளராகப் பணிபுரிந்து வரும் திரு.கு.ராஜா த/பெ.குமாரசாமி என்பவர் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக துறையூர் நகராட்சிக்கு ஒரு வழி மாறுதல் செய்து கொடுக்க கோரியதனை ஏற்று தனி அலுவலர் அவர்களின் தீர்மானம் எண்.301 நாள்.10.07.2020-ல் மன்ற தீர்மானத்தில் அனுமதி வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என தெரிவித்தும் மற்றும் மேற்காணும் கோரிக்கையின் மீது உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக | தீர்மான எண்:507 அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | தீர்மானத்தின் நகல் இணைத்தும் வரப்பெற்றுள்ளது.<br>திரு.கு.ராஜா த/பெ.குமாரசாமி தூய்மைப்பணியாளரின் குடும்ப சூழ்நிலையினைக் கருத்தில் கொண்டு ஒரு வழி பணி மாறுதல் அடிப்படையில் துறையூர் நகராட்சியில் தூய்மை பணியாளர் காலிப்பணியிடத்தில் பணியில் சேர அனுமதிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2587/2020/சி1)<br>**அலுவலக குறிப்பு** :<br>தனியரின் குடும்ப சூழ்நிலையினைக் கருத்தில் கொண்டு ஒரு வழி பணிமாறுதல் அடிப்படையில் துறையூர் நகராட்சியில் உள்ள தூய்மைப்பணியாளர் காலிப்பணியிடத்தில் பணியில் சேர மன்றம் அனுமதிக்கலாம். | |
| 30.09.2020 | **05** | துறையூர் நகராட்சி வார்டு எண்.23ல் அமைந்துள்ள கூட்டுறவு நகர் பூங்கா காலியிடத்தை இப்பகுதியில் நுடவைத்திய சாலை நடத்தி வரும் தனிநபர் ஒருவர் ஆஸ்பத்திரிக்கு வருபவர்கள் ஆக்கிரமித்து இடையூறு செய்து வருவதாகவும், பூங்காவினை நகராட்சி பராமரிப்பு செய்வதில்லை எனவும், மேலும் பேருந்து நிலையம் எதிர்புறம் உள்ள பொதுப்பணித்துறைக்கு சொந்தமான சின்ன ஏரியில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவில்லை எனவும் தெரிவித்து திரு.M.முருகானந்தம் என்பவர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் பொதுநல வழக்கு WP(MD) No.11542/2020 தொடர்ந்துள்ளார் என சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கறிஞர் திரு.R.முருகன் என்பவரிடமிருந்து நாள் 11.09.2020ல் கடிதம் வரப்பெற்றும், மேலும் இவ்வழக்கில் நாள்.14.09.2020ல் நீதிமன்றம் பிரதிவாதிகளுக்கு நோட்டீஸ் சார்வு செய்ய வலியுறுத்தி வழக்கு வரும் 28.09.2020 அன்று நீதிமன்றத்தால் ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் பூங்கா காலியிடத்தை தனிநபர் ஆக்கிரமிக்கா வண்ணம் சுற்றுச்சுவர் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.9.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண்.2708/2020/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மேற்படி செலவினம் பொது நிதி/ மனைப்பிரிவு அபிவிருத்தி கட்டணத்தில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:508<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>30.09.2020</td>
<td>06</td>
<td>
துறையூர் நகராட்சி TN48H4626 வாகன தகுதி சான்று பெற பழுது நீக்கம் செய்ய 16.09.2020 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><td>வ. எண்</td><td>வேலையின் பெயர்</td><td>ஜனதா ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் 32-A பூக்கொல்லை தெரு, தஞ்சாவூர் ரோடு, திருச்சி.</td><td>ரீட்டா ஆட்டோ கேரஜ் 10, சென்னை பைபாஸ் ரோடு, திருப்பதி ஸ்டீஸ் அருகில், அப்பல்லோ மருத்துவமனை பின்புறம் திருச்சி</td><td>டொமினிக் ஆட்டோ கேரே 23, அன்பில் தர்மலிங்கம் நக எடைமலைப்பட் புதூர், திருச்சிராப்பள்ள</td></tr>
<tr><td>01)</td><td>வாகனம் பழுது நீக்கம் செய்தல்</td><td>ரூ.1,58710 மதீப்பிட்டை விட குறைவு</td><td>ரூ.1,78,180 மதீப்பிட்டை விட அதிகம்</td><td>ரூ.1,74,640 மதீப்பிட்டை வி அதிகம்</td></tr>
</table>
ந.க.எண்.4965/2011/எச்1.<br>
அலுவலக குறிப்பு:<br>
வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஜனதா ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் திருச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.<br>
மேலும் பொது சுகாதார பணியின் அத்தியாவசிய தேவையை கருதி, பொது சுகாதார பணிக்கு மேற்கண்ட வாகனம் அவசியம் தேவைப்படுவதால், மன்ற அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை அனுமதித்து வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>தீர்மான எண்:509<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.09.2020</td>
<td>07</td>
<td>இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்துநிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு தினசரிகட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம், நகராட்சி ஆடுவதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூல் செய்துக்கொள்ளும் குத்தகை உரிமம், சுவாமிநாதன் தினசரிமார்கெட் கடைகள் 15,16,17,34,43,44.மற்றும் 45 க்கான குத்தகை உரிமம் , வாரச்சந்தையில் உள்ள ஆட்டிறைச்சி கடைகள் 2,3,4,6,8,9,10,11,12,13,14,15,16, மற்றும் 17 அண்ணா பேருந்து நிலையம் பழைய நகராட்சி அலுவலகவளாக புதிய கடை எண் 2,4,5, 9,10 மற்றும் 18 கடைகளுக்கும் குத்தகை உரிமங்கள் 2020-2021, முதல் 2022-2023 முடிய மூன்றாண்டுக்கான</td>
<td>தீர்மான எண்:510<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>உரிமம் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 23.09.2020-ம் தேதி நடைபெறும் விபரத்தினை கீழ்கண்ட தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.<br>
<table>
<tr><th>வ. எண்</th><th>விளம்பரம்செய்யப்பட் ட நாளிதழ் பெயர்</th><th>விளம்பரம் செய்யப்பட்டநாள்</th><th>தொகை (ரூபாய்)</th></tr>
<tr><td>1</td><td>தினதந்தி, திருச்சி பதிப்பு</td><td>02.09.2020</td><td>ரூ.7392/-</td></tr>
</table>
<br>
மேற்கண்ட நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு ADWAVE ADVERTISING RIVATE LTD, CHENNAI, நிறுவனம் ரூ.7392/- வழங்க கேட்டுக்கொண்டுள்ளது. ஆகையால் தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
ந.க.எண்.380/2020/அ1<br>
அலுவலககுறிப்பு: அ) அனுமதிக்கலாம்<br>
ஆ) செலவினத்தை நகராட்சி பொதுநிதிலிருந்து செலவு செய்யலாம்</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.09.2020</td>
<td>08</td>
<td>இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட குத்தகை உரிமம் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 23.09.2020ம் தேதிகோரப்பட்டது. வரிசை 1 முதல் 5 வரை கண்டுள்ள இனத்திற்கு ஏல பொறுப்புத்தொகை எவரும் செலுத்தாததால் ஏலக் கேள்வி ஏதும் இல்லை. மேலும் மேற்காணும் இனங்களுக்கு மறு ஏலம் கோர மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>
<table>
<tr><th>வ. எண்.</th><th>குத்தகை இனம் விபரம்</th></tr>
<tr><td>1.</td><td>துறையூர் நகராட்சி பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு தினசரி கட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம்.</td></tr>
<tr><td>2.</td><td>துறையூர் நகராட்சி ஆடுவதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூல செய்துகொள்ளும் குத்தகை உரிமம்.</td></tr>
<tr><td>3.</td><td>துறையூர் நகராட்சி சுவாமிநாதன் தினசரி மார்க்கெட் கடைகள், 15,16,17,34,42,43,44 மற்றும் 45க்கான குத்தகை உரிமம் (ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.</td></tr>
<tr><td>4.</td><td>வாரச்சந்தையில் உள்ள ஆட்டிறைச்சி கடைகள் 2,3,4,6,8,9,10,11,12,13,14,15,16, மற்றும் 17(ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்)</td></tr>
</table></td>
<td>தீர்மான எண்:511<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | 5. துறையூர் நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையம் பழைய நகராட்சி அலுவலக வளாக புதிய கடை எண் 2,4,5,9,10 மற்றும் 18 (ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்).<br>ந.க.எண்.380/2020/அ1<br>**அலுவலக குறிப்பு** :<br>மேற்காணும் குத்தகை இனங்கள் வரிசை எண் 1 முதல் 5 வரை கண்டுள்ள இனங்கள் நகராட்சி பொறுப்பில் உள்ளது என்பதை மன்றம் பதிவு செய்யலாம். மேலும் வரிசை எண்.2,3,4, மற்றும் 5-ல் கண்டுள்ள இனங்கள் ஏலம் போகாததால் கேட்பு இல்லை எனவும் வரிசை எண்.1, இந்நகராட்சி அண்ணாபேருந்து நிலையத்தில் 01.09.2020-ம் தேதி முதல் பேருந்துகள் குறைவான அளவில் வந்து செல்கிறது. இப்பேருந்துகளிடம் தினசரி கட்டணம் வசூல் இந்நகராட்சி பணியாளரைக்கொண்டு வசூல் செய்து இந்நகராட்சியில் செலுத்தப்பட்டு வருகிறது. என்பதனை பதிவு செய்யவும் மேற்காணும் வ.எண்.1 முதல் 5 வரை உள்ள இனங்கள் மறு ஏலம் விடவும் மன்றம் அனுமதிக்கலாம் | |
| 30.09.2020 | **09** | துறையூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகன எண்.TN48H4626 31.10.2020-வுடன் காப்பீட்டு காலம் முடிவடைகிறது மற்றும் TN48AT8614 வாகனத்திற்கு 16.10.2020-வுடன் காப்பீட்டு காலம் முடிவடைகிறது. மேலும் TN48H4626 ரூ.20,535/- மற்றும் TN48AT8614 ரூ.41,800/-ம் மொத்தம் ரூ.62,335/- ஐ UNITED INDIA INSURANCE COMPANY LIMITED என்ற நிறுவனத்திற்கு காப்பீட்டு தொகை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1263/2013/எச்1)<br>**அலுவலக குறிப்பு** :மன்றம் அனுமதி வழங்கலாம். | தீர்மான எண் :512<br>அனுமதிக்கப்பட்டது |
| 30.09.2020 | **10** | நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண்.168 நாள்.16.11.2015ன் உத்திரவில் பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் துப்பரவு பணியாளர்களுக்கு வழங்கப்படும் சீருடை அரைக்கால் சட்டைக்கு பதிலாக முழுக்கால் சட்டை வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.<br>மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்.25480/ஜெ3/2015/நாள்.13.06.2016ன் கடிதத்தில் துப்புரவு பணியாளர்களுக்கு வழங்கப்படும் சீருடைகள் அரசாணை எண். 60 Handlooms Handicrafts, Textiles and khadi (E1) department. நாள்.03.03.16ன் ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கோ-ஆப்டெக்ஸ் பெரம்பலூர் நிறுவனம்அவர்களிடம் வாங்கி கொள்ள அனுமதிக்கு. ஆகவே, துறையூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மற்றும் இதரப் பிரிவுகளில் பணிபுரிந்து பணியாளகளுக்கு 2020-21ஆம் ஆண்டிற்கான சீருடை | தீர்மான எண்:513<br>அனுமதிக்கப்பட்டது |

வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எ ண் | பணியாளர் விபரம் | மொத் த நபர் | ஒரு செட்டுக்கா ன அளவு | ஒரு நபருக்கா ன மொத்த துணி அளவு (2 செட்) | மொத்த துணி அளவு |
|---|---|---|---|---|---|
| 1 | ஆண் தூய்மை பணியாளர்கள் முழுக்கால் சட்டை | 25 | 1.30 | 25x1.30x2 | 65 |
| 2 | ஆண் தூய்மை பணியாளர்கள் அரைக்கை சட்டை | 25 | 1.75 | 25x1.75x2 | 87.50 |
| 3 | பெண் தூய்மை பணியாளர்கள் சேலை | 22 | 2 | 22x2 | 44சேலை |
| 4 | பெண் தூய்மை பணியாளர்கள் ரவிக்கை | 22 | 0.90 | 0.90x2 | 39.60 |
| 5 | தூய்மை பணியாளர்கள் இடுப்பு துணி | 47 | 2 | 47x2 | 94 |
| 6 | காக்கி சட்டை (து.ப.மே. 3பேர்) (ஓட்டுநர். 4 பேர்) | 7 | 1.75 | 7x1.75x2 | 24.50 |
| 7 | முழுகால் சட்டை (து.ப.மே3 பேர்) (ஓட்டுநர். 4 பேர்) | 7 | 1.30 | 7x1.30x2 | 18.20 |
| 8 | அலுவலக உதவியாளர் வெள்ளை சேலை | 1 | 2 | 1x2 | 2 சேலை |
| 9 | அலுவலக உதவியாளர் வெள்ளை ரவிக்கை | 1 | 0.90 | 1x0.90x2 | 1.80 |
| 10 | அலுவலக உதவியாளர் | 1 | 1.75 | 1x1.75x2 | 3.50 |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>வெள்ளை சட்டை</td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>11</td><td>அலுவலக உதவியாளர் வெள்ளை பேண்ட்</td><td>1</td><td>1.30</td><td>1x1.30x2</td><td>2.60</td></tr>
<tr><td>12</td><td>அலுவலக இரவ காவலர் காக்கி சட்டை</td><td>1</td><td>1.75</td><td>1x75x2</td><td>3.50</td></tr>
<tr><td>13</td><td>அலுவலக இரவ காவலர் காக்கி முழுகால் சட்டை</td><td>1</td><td>1.30</td><td>1x30x2</td><td>2.60</td></tr>
</table>
(ந.க.எண்.3570/2018/எச்1)<br>
அலுவலக குறிப்பு<br>
தீபாவளி பண்டிகைக்கு முன்னதாக பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டியிருப்பதால் சீருடை 2 எண்ணிக்கை வழங்க உத்தேச செவினம் ரூ.2 இலட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.09.2020</td>
<td>11</td>
<td>துறையூர் நகராட்சி வார்டு எண்.23 கூட்டுறவு நகர் பூங்கா ஆக்கிரமிப்பு தொடர்பாக எம்.முருகானந்தம் என்பவர் W.P.(MD)No.11542/2020-ல் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில்<br>
1. மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி<br>
2. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர்,<br>
3. ஆணையர், துறையூர் நகராட்சி<br>
4. சுகாதார அலுவலர், துறையூர் நகராட்சி<br>
ஆகியோர் மீது வழக்கு தொடர்ந்துள்ளார் மேற்கண்ட வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராகி வாதிட திரு.இராஜராஜன்,பி.எ.,பி.எல்., அவர்களை கேட்டுக்கொள்ளப்பட்டு வழக்கு நடை பெற்று வருகிறது. மேற்கண்ட வழக்கிற்கு (1).ஆணையர், துறையூர் நகராட்சி (2). சுகாதார அலுவலர் துறையூர் நகராட்சி ஆகியோருக்கு வழக்கு கட்டணமாக 10,000+10,000= 20,000/- வழங்க மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.(ந.க.எண்.2703/2020/F1)<br>
அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:514<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.09.2020</td>
<td>12</td>
<td>துறையூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்று நோய் பரவலை முன் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு</td>
<td>தீர்மான எண்:515<br>அனுமதிக்கப்பட்டது<br>.</td>
</tr>
</table>

பொதுசுகாதார பிரிவிற்கு தேவையான கீழ்க்கண்ட சுகாதார கிருமி நாசினிகள் வாங்கி கொள்ள 07.09.2020 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது. மேலும் கொரோனா தடுப்பு நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதால் ரூ.7.00 இலட்சத்திற்கு செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

| வ. எண் | பொருள் விபரம் | வளம் கெமிக்கல் & மினரல்ஸ், 1st floor No.14,15, 5th Cross | VMC Traders Minaral Based Chemicals Company , 5/5, Mill Street, அரியமங்களம் | விஜய் பவுடர் மற்றும் கெமிக்கல்ஸ், 47/217, தெற்கு தெரு, லால்குடி |
|---|---|---|---|---|
| 1 | பிளிச்சிங் பவுடர் | ரூ.55.00/- Per 1Kg (Including GST) | ரூ.65.00/- Per 1Kg (Including GST) | ரூ.64.90/- Per 1Kg (Including GST) |
| 2 | நீர்த்த சுண்ணாம்பு | ரூ.9.87/- Per 1Kg (Including GST) | ரூ.12.00/- Per 1Kg (Including GST) | ரூ.15.75/- Per 1Kg (Including GST) |

(ந.க.எண்.810/2020/எச்1)

**அலுவலக குறிப்பு:**

1. அவசர அவசியம் கருதி, மன்ற அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலர்/ஆணையரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியமைக்கும் குறைந்த விலைப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினம் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. வரப் பெற்ற 3 விலைப்புள்ளிகளில் வளம் கெமிக்கல்ஸ் & மினரல் திருச்சிராப்பள்ளி அவர்களின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| 30.09.2020 | **13** | இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணி, பொதுசுகாதார பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண்.28369/ஜெ3 நாள் 10.12.2018 உத்திரவின் படி 81 மனித ஆற்றல் சப்ளை செய்ய அவுட் சோர்சிங் | தீர்மான எண்:516 அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | முறையில் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து நகர் மன்ற தீர்மான எண். 443 நாள் 30.06.2020 ல் 01.07.2020 முதல் 30.09.2020 முடிய 3 மாதங்களுக்கு மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் நிலா சுய உதவிக்குழுவிற்கு அனுமதி வழங்கப்பட்டது. மேலும் உலகம் முழுவதும் உள்ள நாடுகளில் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவி வருவதை தடுப்பு பணியாக 144 ஊரடங்கு தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.ஆதலால் மனித ஆற்றல் சப்ளை செய்திட ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத சூழ்நிலை உள்ளதால் பொது மக்கள் பொது சுகாதாரம் நலன் கருதி மேற்படி பணிகளுக்கு 01.10.2020 முதல் 31.03.2021 வரை (ஆறு மாதங்கள்) நிலா மகளிர் சுய உதவிக் குழுக்கள் 32 பணியாளர்களை நியமித்து மாவட்ட ஆட்சியர் திருச்சிராப்பள்ளி அவர்களது 2017-18 ஆம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக் கூலி ரூ.295 அடிப்படையில் ரூ.17,00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கண்டுள்ள சுகாதார பணிகளை இந்நகராட்சி செவலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.4244/2018/எச்1)<br>**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம். | |
| 30.09.2020 | **14** | இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணி பொதுசுகாதார பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண். 28369/து3 நாள் 10.12.2018 உத்திரவின் படி 81 மனித ஆற்றல் சப்ளை செய்ய அவுட் சோசிங் முறையில் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது இதனை தொடர்ந்து நகர் மன்ற தீர்மான எண்.444 நாள். 30.06.2020 ல் 01.07.2020 முதல் 30.09.2020 முடிய 3 மாதங்களுக்கு மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் நிலா சுய உதவிக்குழுவிற்கு அனுமதி வழங்கப்பட்டது. மேலும் உலகம் முழுவதும் உள்ள நாடுகளில் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவி வருவதை தடுப்பு பணியாக 144 ஊரடங்கு தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.ஆதலால் மனித ஆற்றல் சப்ளை செய்திட ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத சூழ்நிலை உள்ளதால் திடக்கழிவு மேலாண்மை பணி, சுகாதார பணிகள், நுண்ணியிர் உரம் தயாரிக்கும் பணிக்கும், பொது மக்கள் பொது சுகாதாரம் நலன் கருதி மேற்படி பணிகளுக்கு 01.10.2020 முதல் 31.03.2021 வரை (ஆறு மாதங்கள்) காயா ஆண்கள் சுய உதவிக் குழுக்கள் மூலம் நுண்ணியிர் உரம் தயாரிக்கும் பணிக்கு 24 பணியாளர்களை நியமித்து மாவட்ட ஆட்சியர் திருச்சிராப்பள்ளி அவர்களது | தீர்மான எண்:517<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | 2017-18 ஆம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக் கூலி ரூ.295 அடிப்படையில் ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கண்டுள்ள சுகாதார பணிகளை இந்நகராட்சி செவலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.4244/2018/எச்1)<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம் | |
| 30.09.2020 | **15** | துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் மற்றும் குடும்ப நலம் திருச்சிராப்பள்ளி அவர்களின் ந.க.எண்.27-அ3-2017 நாள். .06.2017ன் கடிதத்தில் டெங்கு சிக்கன்குனியா கட்டுப்பாட்டு கொசு ஒழிப்பு பணி தொடர்பாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக (Domestic breeding checker) களப்பணியாளர்களை நியமனம் செய்து கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து நகர் மன்ற தீர்மான எண்.445 நாள். 30.06.2020 ல் 01.07.2020 முதல் 30.09.2020 முடிய 3 மாதங்களுக்கு மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் நிலா சுய உதவிக்குழுவிற்கு அனுமதி வழங்கப்பட்டது. தற்பொழுது கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவி வருவதை தடுப்பு பணியாக 144 ஊரடங்கு தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளதாலும் மனித ஆற்றல் சப்ளை செய்திட ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத சூழ்நிலை உள்ளதாலும் இந்நகராட்சி 24 வார்டுகளிலும் டெங்கு காய்ச்சல் முன் தடுப்பு நடவடிக்கையாக ஒவ்வொரு வீடுகளாக சென்று source reduction பணி மேற்கொள்ளவும் மற்றும் கொசு புழு ஆதாரங்களை அதன் ஆரம்பநிலையிலேயே கண்டறிந்து அபேட் மருந்திட்டு அழிக்கவும் முதிர் கொசுக்களை கொசு புகைமருந்து அடிப்பான் இயந்திரங்கள் கொண்டு அழித்திடவும் மற்றும் தெருக்களில் பயனற்ற வகையில் உள்ள டயர்கள், உடைந்த மற்றும் தேவையற்ற பிளாஸ்டிக் தென்னைமட்டை, கொட்டாங்குச்சி, கண்ணாடி பொருட்கள், ஆட்டு உரலில் தேங்கியுள்ள நாள்பட்ட தண்ணீரை நீக்குதல் மற்றும் அரசு மற்றும் அரசு சாரா தனியார் அலுவலகங்கள் மற்றும் பள்ளிகளில் குடிநீர் தொட்டிகள் சுத்தமாக வைத்துள்ளதை உறுதி செய்தல், நகராட்சி எல்லைக்குட்பட்ட மருத்துவமனைகளை சுகாதாரமாக வைத்துள்ளதை உறுதி செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளவும் டெங்கு காய்ச்சல் முன் தடுப்பு நடவடிக்கை மற்றும் கொரோனா தொற்று நோய் பராவமல் இருக்க உரிய நடவடிக்கைகளுக்கு 30 களப்பணியாளர்களை 01.10.2020 முதல் 31.03.2021 முடிய நியமித்து கொள்ளவும் மேற்கண்ட பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருச்சிராப்பள்ளி அவர்களது விலைவிகிதத்தில் அமர்த்திக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.16.00 லட்சதிற்கு மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2177/13/எச்1)<br>**அலுவலக குறிப்பு:** இப்பணியின் அத்தியாவசிய தேவையினை கருத்தில் கொண்டு 01.10.2020 முதல் 31.03.2021 முடிய 6 மாதங்களுக்கு உள்ளூரில் இயங்கி வரும் தாழைமலர் மகளிர் சுய உதவிக்குழுக்களை கொண்டு பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினம் வருவாய் நிதியில் செய்துக்கொள்ளவும் மன்றம் | தீர்மான எண்:518 அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | அனுமதிக்கலாம். | |
| 30.09.2020 | **16** | துறையூர் நகராட்சி பொறியியல் பிரிவில் பயன்பாட்டில் உள்ள அலுவலக ஈப்பு வாகனம் எண்.TN48Z6096-க்கு 2 எண்ணிக்கை டயர்கள் முழுவதும் பழுதடைந்துள்ளதால் அதனை மாற்றி அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.14,500/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.3871/2019/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்:519 அனுமதிக்கப்பட்டது |
| 30.09.2020 | **17** | துறையூர் நகராட்சி கணினி பிரிவில் இயங்கி வருகின்ற Numeric 5 KVA Online UPS - 2 Nos. (Sl.No. II 100503304, II 140706621) மற்றும் 2 KVA Online UPS - 1 No. (Sl.No.I074309167)க்கான ஆண்டு பராமரிப்பு Novateur Electrical and Digital System Pvt Ltd, நிறுவனத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி ஆண்டு பராமரிப்பு 30.09.2020 உடன் முடிவடைய உள்ளது. மேற்படி 5KVA UPS-யை Novateur Electrical and Digital Systems Pvt.Ltc., Madurai நிறுவனத்திடம் பராமரிப்பினை மேலும் ஒரு வருடம் (01.10.2020 முதல் 30.09.2021) புதுப்பித்துக்கொள்ளவும், அதற்கான செலவு தொகை ரூ.22420/- மேற்படி நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.168/2020/இ1)<br>**அலுவலக குறிப்பு** :மேற்படி செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:520 அனுமதிக்கப்பட்டது |
| 30.09.2020 | **18** | துறையூர் நகராட்சி பழைய அலுவலக வளாகத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி படிக்கட்டில் உள்ள பக்கவாட்டு சுவர் மற்றும் தொட்டியின் மேல்புறம் உள்ள பக்கவாட்டு சுவர் முழுவதும் பழுதடைந்துள்ளதால் அதனை சீரமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2745/2020/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:521 அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 30.09.2020 | **19** | துறையூர் நகராட்சியில் மேற்கொள்ளப்படும் திட்டப்பணிகளுக்கு கணினியில் மதிப்பீடு தயார் செய்தல், புதிய திட்டங்களுக்கு கருத்துரு தயார் செய்தல், அன்றாடம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம், நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் தட்டச்சு செய்தல், நகர்மன்ற கூட்ட பொருள் தட்டச்சு செய்தல் போன்ற பணிகளை இந்நகராட்சியில் தட்டச்சர் பணியிடம் காலியாக உள்ளதால் மேற்படி பணிகளை செய்வதில் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. எனவே, ஒருவருட காலத்திற்கு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் ஊதிய விகிதத்தில் ஒப்பந்த அடிப்படையில் தட்டச்சு பணிக்காக ஒரு பணியாளர் பெற்று பணி செய்திட இதற்கான உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.3618/2016/இ1)<br>**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:522<br>அனுமதிக்கப்பட்டது |
| 30.09.2020 | **20** | துறையூர் நகராட்சியில் காவிரி குடிநீர் விநியோகம் நான்கு பெரிய அளவிலான மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள் மூலமும் சின்டெக்ஸ் தொட்டிகள் மூலமும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை இயக்குவதற்கு குடிநீர் பணியாளர்கள் இல்லாததால், நகராட்சி பகுதிகளுக்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்ய வால்வுகளை இயக்குவதற்கு 4 நபர்களை ஒருவருட காலத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் ஊதிய விகிதத்தில் (ஊதியம்) ஒப்பந்த அடிப்படையில் பெற்று பணி செய்திட இதற்கான உத்தேச செலவினம் ரூ.6.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.462/2014/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>மேற்படி செலவினம் குடிநீர் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:523<br>அனுமதிக்கப்பட்டது |
| 30.09.2020 | **21** | துறையூர் நகராட்சியில் தெருவிளக்குகள், காவிரி குடிநீர் விநியோகம் செய்யப்படு 4 மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள், ஆழ்துளைக்கிணறுகள் | தீர்மான எண்:524<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்படும் நீர்த்தொட்டிகள் (சிறுமின்விசை பம்புகள் மூலமாக), பேருந்து நிலைய மின் பணிகள் பராமரிப்பு, கழிப்பிட கட்டிடங்களில் மின் பராமரிப்பு, நகராட்சி அலுவலக கட்டிடம் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் மின் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்ட பணியிடங்களான மின் கம்பியாளர் -2, மின் பணியாளர் பணியிடம் - 2, மின்கம்பி உதவியாளர் பணியிடம் - 2 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு மின் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது 03.01.2018 முதல் தெருவிளக்கு பராமரிப்பு தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்கண்ட விபரப்படி மின் கம்பியாளர், மின் பணியாளர், மின் பணி உதவியாளர் அனைத்து பணியிடங்களும் காலியாக உள்ளதால் தெருவிளக்குகள் பராமரிப்பு பணிகள் தவிர மற்ற அனைத்து மின் பணிகளும் பராமரிக்க இயலாத நிலையில் உள்ளது. எனவே, மாவட்ட ஆட்சித்தலைவர் திருச்சிராப்பள்ளி அவர்கள் நிர்ணயித்துள்ள விலை விகிதத்தின் (ஊதியம்) ஒப்பந்த அடிப்படையில் மின் பணியாளர் ஒருநபர் பெற்று பணி செய்திட ஒருவருட காலத்திற்கு உண்டாகும் உத்தேச லெசவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2744/2020/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | |
| 30.09.2020 | **22** | துறையூர் நகராட்சியில் வடகிழக்கு பருவமழைகள் 2020ஐ சமாளிக்கும் வண்ணம் தேவையான மணல் மூட்டைகள் தயாரித்து கையிருப்பு வைத்துக்கொள்ளல், மழை வெள்ள நேரத்தில் தேங்கிய மழைநீரை வடிகட்டும் முகமாக ஆயில் இன்ஜின், ஜெனரேட்டர் வாடகை அடிப்படையில் நிர்ணயம் செய்து தயார் நிலையில் இருத்தல், பணியாளர்களுக்கு தேவையான Torch, Shoe கொள்முதல் செய்து கொள்ளுதல், மரம் அறுக்கும் Power shaw 3 எண்ணிக்கை கொள்முதல் செய்தல் மற்றும் இதர தேவையான பொருட்கள் பொறியியல் பிரிவின் மூலம் கொள்முதல் செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1799/2020/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் | தீர்மான எண்:525<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். | |

ஒம்/-.அ.வீரமுத்துக்குமார்
தனி அலுவலர்

/ /உண்மை நகல் //

ஆணையர்,
துறையூர் நகராட்சி